பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(17.06.2015 முதல் 21.06.2015 வரை)
**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம்இ ஆடுதுறை – 612 101**
போன் : 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in - Fax: 0435 2472881

==========================================================================

தேதி 16.06.15

## கடந்த 4 நாளில் நிலவிய வானிலை (12.06.15- 15.06.15)

| காரணிகள் | கடந்த வார வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 35-38 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 25-26 |
| மேக ஸ்ரீட்டம் | 6 |
| ஈரப்பதம் (ு) | 63-69 |
| காற்றின் வேகம் (கி.மீ.) | 12-17 |

## அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | தேதி-1 17,06,15 | தேதி-2 18,06,15 | தேதி-3 19,06,15 | தேதி-4 20,06,15 | தேதி-5 21,06,15 |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 36 | 36 | 36 | 36 | 36 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 26 | 26 | 26 | 26 | 26 |
| மேக ஸ்ரீட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| ஈரப்பதம் (ு) | 45-73 | 45-73 | 45-73 | 45-73 | 50-75 |
| காற்றின் வேகம் (கி.மீ,மணிக்கு) | 15 | 15 | 15 | 15 | 15 |
| காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

- 17.06.15 முதல் 21.06.15 வரை மேகஸ்ரீட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். மழை இல்லை

### வேளாண் அறிவுரைகள்

### முக்கிய பயிர்கள் நெல்இ கரும்பு வாழை் எள் மக்காச்சோளம் மற்றும் நிலகடலை

### எள் முதிர்ச்சி மற்றும் அறுவடை பருவம் நெல் நாற்றங்கால் தயார்செய்தல்

- திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் ? இரண்டரை சென்ட் நிலத்தில் மேட்டு பாய் நாற்றங்காலில் 5 கிலோ இரண்டாம் கொம்பு நெல் விதையை சீராக துவ்வி நாற்று விடவும். முதல் ஐந்து நாள் வரை பூவாளி உதவியுடன் நாற்றங்கால் நன்கு நனையும்படி காலை அல்லது மாலை வேளைகளில் தண்ணீர் தெளிக்கவும். ஆறாம் நாளிலிருந்து பாய் நாற்றங்காலைச் சுற்றியுள்ள வாய்க்காலில் நாற்றுப்படுகை நன்கு நனையும்படி தண்ணீரை பாய்ச்ச வேண்டும். நாற்று விட்ட ஒன்பதாம் நாள் மாலை வேளையில் 0.5 சத யூரியா கரைசலை தெளிக்கவும். நாற்று பறிப்பதற்கு இரண்டு நாள் முன்பாக தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்த வேண்டும். நாற்றுவிட்ட 14ஆம்நாள் நாற்றுகள் நடவிற்கு தயார் ஆகிவிடும்.

- குறுவை பருவத்திற்கு ஏற்ற நெல் இரகங்களான ஆடுதுறை 36 ? ஆடுதுறை 43 ? ஆடுதுறை 45 மற்றும் கோ 51 விதைகளை விதைப்பு செய்வதற்கு முன்பு விதை நேர்த்தி செய்வது அவசியம். நெல் விதைகளை கார்பென்டாசிம் மருந்து 1 கிலோ விதைக்கு 2 கிராம் அல்லது சூடோமோனாஸ் பாக்டீரியா 10 கிராம் என்ற அளவில் கலந்து ஈர விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இதனால் விதைகள் ஸ்ரீலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்த முடியும்.

- குறுவை பருவத்திற்கு நாற்றங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். கடைசி உழவின் போது நாற்றங்காலுக்கு 40 கிலோ டிஏபி உரம் அடியுரமாக இடவேண்டும். களிமண் நிலத்திற்கு 4 கிலோ ஷிப்சமும் ? ஒரு கிலோ டி.ஏ.பி. ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு என்ற அளவில் விதைத்த 10 ஆம் நாள் இடவேண்டும். இது வேர் அறுபடாமல் நாற்றுக்களை பறிக்க உதவும்.

- மறுதாம்பு கரும்பு பயிரில் 60 ஆம் நாள் ஒரு களை எடுத்து விட்டு ஒரு ஏக்கருக்கு 80 கிலோ யூரியாவும் 25 கிலோ ஸ்ரீரியேட்ஆப் பொட்டாஷும் கலந்து இடவேண்டும்.

ஒம்,- வெ. இரவி.

இயக்குநர்

,உண்மை நகல்,

பேராசிரியர்(உழவியல்)